05.02.2026

அ.வ.எண். 338/2017

வா.சா.2 – திரு. சுப்பிரமணியம், த/பெ.கணேசன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 05.02.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் Bsc.chemistry படித்துள்ளேன், உடுமலைபேட்டை அரசு கலைக்கல்லூரியில் படித்தேன். நான் 2005 ம் ஆண்டில் கல்லூரி படிப்பை முடித்தேன். நான் படித்து முடித்து தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்தேன். நான் சுகுணா கோழி பண்ணையில் பணிபுரிந்தேன். Lab Technician ஆக பணிபுரிந்தேன். 2011 ம் ஆண்டிற்கு பின்னிட்டு நான் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டேன். 2010 முதல் 2024 வரை உள்ள கடவுசீட்டுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் 2011 ம் ஆண்டு தான் கடவுச்சீட்டு எடுத்தேன், 2019 ம் ஆண்டு வரை வெளிநாட்டில் வேலை செய்தேன்.

2. என்னுடைய தாயார் சித்ராவிற்கு வழக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் கிரயம் மூலம் பாத்தியப்பட்டது. என்னுடைய தாயார் வழக்கின் போது மூலபத்திரத்தின் மூலமாக சொத்து பாத்தியம் என சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3 ல், தாவா சொத்து பழைய வீட்டுடன் கூடிய இடம் என்றும், அது இடியும் தருவாயில் உள்ளது என்றும், பிரதிவாதி, வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தின் தென்திசை மேல்கோட்டு பகுதியில் கிழமேலாக 10 முழம் தென்வடலாக 19 முழம் சொத்தினை அபகரித்து சட்டத்திற்கு புறம்பாக ஓட்டு வீட்டை கட்டியுள்ளார் என சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனாஎன்றால் இல்லை. மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் விதமாக என்னுடைய தாயார் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை, அதற்காக விண்ணப்பம் கொடுக்கும்போது பிரச்சனை ஏற்பட்டது.

3. அவ்வாறு விண்ணப்பம் கொடுத்ததற்கு வருவாய் துறையினர் கடிதம் கொடுத்துள்ளனரா என்றால் இல்லை. நாங்கள் விண்ணப்பம் கொடுத்தோம்.

மேற்கண்டவாறு விண்ணப்பம் கொடுத்ததை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலம் பத்தி 4 ல் சொன்ன சங்கதிகளின் படி இந்த வழக்கில் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரோ, காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் மனு ரசீது எண்.203/2012 தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அவ்வாறு புகார் மற்றும் மனு ரசீது நானும், என் தாயாரும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளோம். பிரமாண வாக்குமூலம் பத்தி 5 ல், தாவா சொத்தில் வீடு கட்ட உள்ளாட்சி அமைப்பு முறையாக அனுமதி வழங்கியுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு அனுமதி பெறுவதற்கு என்ன பத்திரம் கொடுக்கப்பட்டடது என்றால் செட்டில்மெண்ட் ஆவணம் கொடுக்கப்பட்டது.

4. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணத்தை காட்டி தான் என் தாயார் அனுமதி பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தில், என் தாயாருக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எனது அம்மாவின் அம்மா ருக்குமணி, என் அம்மாவுக்கு எழுதி வைத்துள்ளார். ருக்குமணியம்மாளுக்கு வழக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என வாசா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ளதா என்றால் ருக்குமணியின் கணவர் பேச்சிமுத்துவின் சொத்து ஆகும்.

5. வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் 2 ம் பக்கத்தில், "நீ எனக்கு ஒரே மகள் ஆனபடியாலும், உன் மீது எனக்குள்ள அன்பினாலும், பிரியத்தினாலும், பிரியப்பட்டு உன்னுடைய பிற்கால நலனை கருதி, உன் பெயருக்கு சொத்து எழுதி வைத்து அதன் மூலம் நீ விருத்தியடைய வேண்டும்" என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணத்தில், வா.சா.ஆ.1, 19.12.1923 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலமாக என் தாயாருக்கும், என் பாட்டிக்கும் சொத்து பாத்தியப்பட்டது என குறிப்பு இல்லை என்றால் பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடவில்லை. செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பாகம் வேறு ஆகும்.

6. தாவா சொத்தில் கட்டியுள்ள வீடு செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளதா, வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் கட்டப்பட்டதா என்றால் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது. எனவே, பிரமாண வாக்குமூலம் பத்தி 5 ல், தாவா சொத்தில் வீடு கட்ட உள்ளாட்சி அமைப்பு வீடு கட்ட அனுமதி வழங்கியது என கூறுவது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்து மற்றும் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சொத்து வேறு என எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் செட்டில்மெண்ட் ஆவணத்தில் புதிய புல எண்.368/2 (89 ச.மீ.), 368/4 (110 ச.மீ), பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சொத்தின் புல எண்.368/3 ஆகும்.

7. மேற்படி விவரத்தை திருத்தப்பட்ட வழக்குரையில் என் தாயார் சொல்லவில்லை என்றால் க.ச.எண்.368/3 இடத்தை சொல்லியுள்ளார். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணத்தில் சொல்லியுள்ள பட்டாவை என் தாயார் தாக்கல் செய்துள்ளரா என்றால் ஆமாம். செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள இரண்டு பட்டாக்களில் உள்ள அளவுகளை என்னால் சொல்ல முடியுமா என்றால் புல எண்.368/2 (89 ச.மீ.), 368/4 (110 ச.மீ) ஆகும். க.ச.எண்.368/3 க்குரிய வருவாய் ஆவணங்களை என் தாயார் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. அதற்காக தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. என் தயார் க.ச.எண்.368/3 ல் உள்ள சொத்தின் அளவுகள் குறித்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், நான் இந்த வழக்கை கேள்விப்பட்டு என் தாயாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி காலகட்டத்தில், நான் இந்தியாவில் இல்லை என்றும், நான் புருனே என்ற நாட்டில் பணிபுரிந்து வந்தேன் என்றும், அதற்கான ஆதாரங்களை என்னுடைய பேஸ்புக் மற்றும் தற்போது பணிபுரிந்து வரும் அலுவலகத்திலும் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur